முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, புதிய பிரிவுகளையெல்லாம் தொடங்கிட வேண்டுமென்கிற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான், நேற்றையதினம்கூட 12 புதிய பிரிவுகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான், கடலூர் மாவட்டத்தில், கடலூரில்* Electrician, *சிதம்பரத்தில்* Wireman *போன்ற பாடப் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, காலத்திற்கேற்ப, காலத்தின் மாற்றத்திற்கேற்ப, மேலும், மேலும் புதிய பயிற்சிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

156—

குழந்தைகள் காப்பகம்

***44797—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகமும், தன்னார்வத் தொண்டு

2015 ஆகஸ்ட் 27]

நிறுவனங்கள்மூலம் இரு முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களும் செயல்பட்டு வருகின்றன. சிவகங்கையில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகமும், அதுமட்டுமல்லாமல், மானாமதுரைக்கு அருகில், மதுரையிலேயே ஓர் அரசு குழந்தைகள் காப்பகமும் செயல்பட்டு வருவதாலும், மதுரைக்கும், மானாமதுரைக்கும் இடைப்பட்ட தூரம் 35 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும், மானாமதுரையில் தனியாகக் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பப்பட்டுக் கூறியிருப்பதால், மானாமதுரையில் குழந்தைகள் காப்பகம் அமைக்கக் கோரினால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் மற்றும் பரிந்துரையுடன் கருத்துரு பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, இதுகுறித்து பரிசீலனை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூது மதியாளர்களுடைய சூழ்ச்சி வலைகளைக் கிழித்தெறிந்து, சமீபத்தில் நடைபெற்ற ஆர்.கே. நகர் சட்டமன்ற இடைத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க மகத்தான வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவராக விளங்கி, தமிழக மக்களின் பாதுகாப்பாளராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் பெண் சிசுக்களுக்கு ஏற்படுகின்ற அந்த விரும்பத்தகாத நிகழ்வுகளை அறிந்து, பெண் சிசுக்களைக் காப்பாற்றுவதற்காக தொட்டில்

குழந்தைகள் திட்டத்தை உருவாக்கி, அதைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இன்றைக்கு ஆயிரக்கணக்கான குழந்தைகளைப் பாதுகாக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஓர் அரசு குழந்தைகள் காப்பகம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் எத்தனை அரசு குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன? எத்தனை குழந்தைகள் அவற்றில் பாதுகாப்பாக உள்ளார்கள்? அரசு குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கு, எந்தமாதிரியான உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு குழந்தைகள் காப்பகத்தில், தாய், தந்தையை இழந்து, முற்றிலும் ஆதரவற்ற நிலையில் உள்ள பெண்கள், 21 வயது வரை தங்கி உயர் கல்வி கற்கலாம். ஆண் குழந்தையாக இருந்தால் 5 வயது முதல் 10 வயது வரையிலும், பெண் குழந்தையாக இருந்தால் 5 வயது முதல் 18 வயது வரைக்கும் தங்கிப் பயிலலாம். இந்த ஆதரவற்றோர் இல்லத்தில், கைவிடப்பட்ட குழந்தைகள், தாய் மற்றும் தந்தை இருவரில் ஒருவர் மரணமடைந்து ஆதரவற்ற நிலையில் உள்ள குழந்தைகள், கணவன் அல்லது மனைவி நீண்ட நாள் சிறைக் கைதியாக உள்ள காரணத்தால் பெற்றோர் பராமரிப்பில் இல்லாத குழந்தைகள், தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட, பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள், தாய், தந்தை இருவர் இருந்தும், தந்தையின் முழுமையான ஊனம் அல்லது இயலாமை காரணமாக வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்ட பெற்றோரின் குழந்தைகள் மட்டும்தான் தங்கிப் பயில்கிறார்கள். 22 மாவட்டங்களில் 26 அரசு குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன.*

அவற்றில் 3,032 மாணவ, மாணவியர் தங்கிப் பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணவீட்டுச் செலவினமாக 750 ரூபாய் வழங்கி, அவர்களுக்கு நல்ல உணவைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் கல்வி பயில்கின்றபோது, தொழில் சார் கல்விக்காக 50,000 ரூபாய் வீதமும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்காக 30,000 ரூபாய் வீதமும் வழங்கி, அவர்கள் படித்து முடித்ததற்குப் பிறகு, அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகளில் தொகுப்பூதிய அடிப்படையில் அந்தப் பிள்ளைகளுக்கு வேலையும் வழங்கப்படுகிறது. மேலும், ஆசிரியர் பயிற்சியை முடித்தவுடன், தனியார் பள்ளியிலே ஆசிரியைகளாகவும் பணிபுரிவதற்கான வழிவகைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதன்படி இந்தக் குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***52920—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி நகராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*